விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 11.25 a.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 12.05 p.m

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No :C.C.No.68/2020

Petitioner side witness : அ.சா.2 Date : 04.04.2025

| | |
|---|---|
| Name : சுந்தரராசு | Taluk : ஓமலூர் |
| Father Name : சின்னுகவுண்டர் | Calling : வனவர்(ஓய்வு) |
| Village : தாண்டானூர், பெரியேரிபட்டி | Age : 61 |

**(Accused Present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் சேலம் சந்தனகிடங்கில் வனவராக பணிபுரிந்து ஒய்வு பெற்றுவிட்டேன். மேட்டுர் வனசரகம் உள்ளூர் தண்டா தெற்குபிரிவு வனவராக பணிபுரிந்த போது 14.12.2019 ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் குரும்பனூர் வடக்கு பீட் எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம், பெரியதண்டா சங்கரன் காடு ஓடை அருகில் யானை ஒன்று இறந்து கிடந்ததாக தகவல் கிடைக்கப்பெற்று நானும் குரும்பனூர் வடக்கு பீட் வனக்காப்பாளர் திரு.பத்ரன் என்பவரும் சம்பவம் இடத்திற்கு சென்று பார்த்தபோது சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஆண் காட்டு யானை ஒன்று இறந்து கிடப்பதை அறிந்து விசாரித்தபோது அருகில் உள்ள ஈரோடு மாவட்ட வடபர்கூர் காப்புகாட்டிலிருந்து உணவு தேடிவந்த காட்டு யானை கீமியான் காட்டைச் சேர்ந்த தங்கவேல், த.பெ.பெரியசாமி கவுண்டர் என்பவர் தோட்டத்தில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டு இருந்ததை சாப்பிடவந்தபோது அவரது நிலத்தில் குச்சிகளை நட்டு இரும்பு கம்பிகளை கொண்டு சட்டத்திற்கு புறம்பாக அமைக்கப்பட்டிருந்த

மின்வேலியில் சிக்கி உயிரிழந்து இருந்ததை அறிந்து குரும்பனூர் வடக்கு பீட் வனக்காப்பாளரிடம் அறிக்கை பெற்று உடனடியாக மேட்டூர் வனசரகருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

2) உடனடியாக வனசரக அலுவலர் சம்பவம் இடத்திற்கு வந்து இறந்த யானையை பார்வையிட்டு அவரால் சேலம் மாவட்டம் வன அலுவலர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பரிமான கழகம் அலுவலர்கள் மேட்டூர் வட்ட நில அளவையர், லக்கம்பட்டி கிராம் நிர்வாக அலுவலர், ஓசூர் வனக்கால் நடை யூனிட், கால்நடை உதவி மருத்துவர், சின்னதண்டா கால்நடை மருந்தகம் மற்றும் கால் நடை மருத்துவர், மேட்டுகொட்டாய் கிராம வனக்குழு தலைவர் ஆகியோர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டு அவர்கள் அனைவரும் வந்தவுடன் தங்கவேல் விவசாய நிலத்தை தணிக்கை செய்தபோது விவசாய நிலத்தில் எல்லை ஓரத்தில் குச்சிகளை நட்டு இரும்பு கட்டு கம்பிகளைக் கொண்டு மின்வேலிகளை அமைத்தற்கு உண்டான குச்சிகள் மற்றும் கட்டு கம்பிகள் சுருள்களை புதர் மறைவிலிருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர் மேட்டூர் வட்ட நிலஅளவையர் நிலத்தை சர்வே செய்து தங்கவேல் என்பவரால் அவரது பட்டா நிலத்தை ஒட்டி அமைந்துள்ள அனுபவ ஓடை புறபோக்கு நிலத்தை ஆகிரமித்து பயிரிடப்பட்டுள்ள நிலத்தில் தான் யானை இறந்து கிடந்தது என்று தெரிவித்தார்.

3) மின்வாரிய அலுவலர்கள் கைப்பற்றப்பட்ட கட்டு கம்பி சுருள்களை ஆய்வு செய்து அதிகபடியான மின்சாரம் சென்றதால் மின்கம்பி கருகி போய் உள்ளது என தெரிவித்தனர். கால்நடை உதவி மருத்துவர் அவர்களால் பிரேத பரிசோதனை செய்து, மருத்துவர் யானை ஆனது

மின்சாரம் பாய்ந்ததால் உடல் கருகி இறந்துள்ளது என்றும் தசை பகுதி மற்றும் இருதயம் வெந்து போய் உள்ளது எனவும் களத்திலேயே தெரிவித்தார். பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் மருந்து தெளித்து மாவட்ட வன அலுவலர் முன்னிலையில் களத்திலேயே புதைக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் போது கிடைக்கப்பெற்ற 2 யானை தந்தங்களையும், கைப்பற்றப்பட்ட பல வகை குச்சிகள் (வேம்பு மற்றும் பொரசு) –10 மற்றும் கட்டு கம்பி சுருள் – சுமார் 5 கிலோ (ஒரு கட்டு) குரும்பனூர் வடக்கு பீட் வனக்காப்பாளார் பத்ரன் என்பவரால் கைப்பற்றப்பட்டு ெஹச் நமூனா சம்பவம் இடத்திலேயே தயார் செய்தார். மின்சாரம் பாய்ந்து யானை இறந்தது உறுதியானதால் நிலத்தின் உரிமையாளர் தங்கவேல் என்பவரை தேடி கீமியான் காடு அவரது வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீடு பூட்டபட்டிருந்ததை அறிந்து அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது தலைமறைவு ஆகியுள்ளார் என்பதை அறிந்து வனசரக அலுவலகத்தில் ஆஜர் ஆகுமாறு தகவல் அளித்து குற்ற வழக்கு பதிவு செய்யும் பொருட்டு மேட்டுர் வனசரக அலுவலகம் பிடிபொருட்களை கொண்டு செல்லப்படுகிறது என்று தல மகஜர் என்னால் தயார் செய்து மேட்டுர் வனசரக அலுவலகம் சென்று 1972 வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பட்டியல் 1ல் உள்ள யானையை மின்சார பாய்ச்சி கொன்றது குற்றம் என்பதால் 1972 வனஉயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 2(5), 2(14), 2(16), 9, 39, 50, 51(1) தண்டனைக்குரிய குற்றம் என்பதால் வனஉரியின குற்ற எண்.4/2019 பதிவு செய்யப்பட்டது.

4) ஆதலால் மேற்கண்ட சட்டப்படி தலைமறைவான எதிரி தங்கவேல், (70) த.பெ.பெரியசாமி கவுண்டர் கீமியான் காடு என்பவர் மீது வழக்கு

பதிவு செய்து எதிரியை தீவிரமாக தேடிவரப்பட்டது. இன்னிலையில் 16.12.2019 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் மேற்படி எதிரி மேட்டுர் வனசரக அலுவலகத்திற்கு வருகை தந்து 14.12.2019 ம் தேதி யானை இறந்த வழக்கு தொடர்பாக வனசரக அலுவலர் முன் சரண் அடைந்தார். அவரை வனசரக அலுவலர் கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது தானாக முன் வந்து வாக்குமூலம் கொடுத்தார். அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் அவருடைய விவசாய பட்டா நிலம் மற்றும் அனுபவ ஓடை புறம்போக்கு நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோள பயிர்களை வனவிலங்குகளிடமிருந்து காப்பாற்றும் விதமாக விவசாய நிலத்தை சுற்றி குச்சிகளை நட்டு கட்டு கம்பிகளை கட்டி அவரது விவசாய கிணறு மின் இணைப்பிலிருந்து சட்டத்திற்கு புறம்பாக மின்வேலி அமைத்ததாகவும் 14.12.2019 ம் தேதி அதிகாலையில் அருகில் இருந்த வனபகுதியிலிருந்து உணவு தேடி வந்த காட்டு யானை மின்வேலியில் சிக்கி இறந்துவிட்டதாகவும் யானை இறந்த பதற்றத்தில் செய்வது அறியாது குச்சிகளை பிடுங்கி மற்றும் கட்டு கம்பி சுருள்களை புதர் மறைவில் மறைத்து வைத்து தலைமறைவு ஆகிவிட்டு அதன் பின்னர் தகவல் அறிந்த பின்னர் வனத்துறையினர் யானையை கைப்பற்றி பிரேத பரிசோதனை செய்து சம்பவம் இடத்திலேயே புதைத்து விட்டு அவரை தேடி வீட்டிற்கு சென்றபோது தலைமறைவாகிவிட்டார் என்பதை அறிந்து சரண் அடையுமாறு அருகில் உள்ளவர்கள் தெரிவித்தை அறிந்து நான் தற்போது சரண் அடைந்துள்ளேன் என்று சொன்னார்.

5) எனது பட்டா நிலம் மற்றும் அனுபவ ஓடை புறபோக்கு நிலத்தில் உள்ள விவசாய பயிர்களுக்கு சட்டத்திற்கு புறம்பாக மின்வேலி அமைத்து

யானை கொன்றது குற்றம் தான் என ஒப்புக்கொண்டதை, தெரியாமல் செய்த தவறுக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொண்டு அவர் கொடுத்த வாக்குமூலம் வனசரகர் முன்னிலையில் என்னால் பதிவு செய்யப்பட்டது. அவரை கைதுசெய்யப்பட்ட விவரம் குரும்பனூர் வடக்கு பீட் வனக்காபாளரால் எதிரியின் உறவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. குரும்பனூர் வடக்கு பீட் வனக்காபாளார் சம்பவம் இடம் வரைப்படம் தயார் செய்தார். வனசரக அலுவலரால் அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்யப்பட்டு நான் மற்றும் வனக்காப்பாளார் சேர்ந்து எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தோம். எதிரியை நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களின் உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டது.

6) 17.12.2019 ம் தேதி கனம் நீதித்துறை நடுவர் முன் கைப்பற்றப்பட்ட பிடிபொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம். நீதிமன்ற உத்தரவுப்படி 2 யானை தந்தங்களையும் மேட்டுர் வனசரக அலுவலகத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. **(என்னால் தயார் செய்யப்பட்ட தலமகஜர் அறிக்கை அ.த.சா.ஆ.7 மற்றும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – செய்யப்படவில்லை</u>

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டுர்.**